ஒரு முன்னோடி இயந்திரமென்று சொன்னேன். இது நாள் ஒன்றுக்கு பத்து கிலோ பூக்களிலிருந்து தான் தைலம் எடுக்கக்கூடியது. இன்னும் சோதனையில் இருக்கிறது.

Pesticides

* 209 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to assess the annual requirement of pesticides for the State and to procure them without delay?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

* 210. வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973–74-ல் விவசாய விநியோக டெப்போக்களில் விற்கப் பட்ட பூச்சி மருந்து எந்தெந்த நிறுவனங்களிலிருந்து வாங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவரப்பட்டியல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல் : பூச்சிக்கொல்லி மருந்துகளை வயலில் அடித்தாலும் கூட பூச்சிகள் சாவதில்லை. ஆகவே, உறுதியான நல்ல பூச்சி மருந்துகளை அரசாங்கமே டெப்போக்கள் வைத்துக் கொடுக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கு. இராசமாணிக்கம் : தஞ்சை மாவட்டத்திற்குத் தேவை யான அளவுக்கு பூச்சிகொல்லி மருந்துகள் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, விலைகளும் அதிகமாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத் திலேயே பூச்சிகொல்லி மருந்து தொழிற்சாலை நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா?

---

* 125–127-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@ 127–131-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 மார்ச் 6]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தஞ்சை மாவட்டத்தில் எந்த இடத்தில் தேவையான அளவிற்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும். ஏன் என்றால் அரசின் கையிருப்பில் தேவையான அளவிற்கு பூச்சிக்கொல்லி மருந்துகள் இருக்கின்றன.

திரு. தொ. ப. சீனிவாசன்: பூச்சி மருந்துகளில் முக்கியமானவற்றை விவசாயிகளுக்குக் கொடுக்காமல் தேவையற்ற வேறு பொருள்களை வாங்கவேண்டுமென்று டெப்போக்களில் இருக்கிற அதிகாரிகள் சொல்கிறார்கள். அந்தச் சங்கடத்தை தவிர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தேவையற்ற பூச்சி மருந்துகளை விவசாயிகள்மேல் திணிப்பது ஒரு பெரும் குற்றமாகும். அந்தக் குற்றத்தை யாராவது செய்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் துறைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, ஒரு ஆண்டுக்குத் தேவைப்படுகிற பூச்சி மருந்து எவ்வளவு என்று அந்த ஆண்டுக்கு முன்னாலேயே கணக்கெடுத்து வாங்கி வைத்துக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வருஷா வருஷம் இப்படித்தான் சொல்லப்படுகிறது. ஆனால் வருஷா வருஷம் இந்தப் பிரச்சினை எழுகிறது. மருந்துகள் கிடைக்காத காரணத்தினால் பல்வேறு தனியார்களிடம் சென்று அதிக விலைக்கு வாங்குகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒரு ஆண்டுக்குத் தேவையான அளவை கணக்கெடுத்து முன்கூட்டியே பெற்றுவருகிறோம் என்று சொல்வது எந்த அளவிற்குப் பொருந்தும் என்று தெரியவில்லை. தேவையான அளவு என்று சொன்னாலுங்கூட அந்த அளவிற்கு வாங்குவதில்லை. தனியார்கள் மிகவும் அதிகமாக வாங்குகிறார்கள். தேவையான அளவிற்கு இந்த ஆண்டாவது வாங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தேவையான மருந்து என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி முன்கூட்டியே வாங்கி அரசின் கையிருப்பில் இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: பூச்சி மருந்துகளில் ஸ்டம்போரர் என்ற குருத்துப் பூச்சியைப் போக்குவதற்கு கொரடான் என்ற மருந்து இருக்கிறது. அது ஒரு ஏக்கருக்கு 7 கிலோ தேவைப்படுகிறது. அதையும் இரண்டு முறைகள் போடவேண்டுமென்று சொல்கிறார்கள்.

ஒரு கிலோ 15 ரூபாய் என்ற விலே விற்பதால் ஒரு முறைக்கே ரூபாய் 105 ஆகிறது. இதுபோன்ற உயர்ந்த விலேகள் உள்ள பூச்சி மருந்துகளே சப்சிடி ரேட்டிலே அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலேவர் அவர்களே, அரசாங்கத்திலே அப்படிக் கொடுப்பதற்கான எந்தவிதத் திட்டமும் இல்லே. இன்ன பூச்சிக்கு இன்ன மருந்து வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. பி.எச்.சி. என்ற மருந்துதான் எந்த இடத்தில் வேண்டுமானுலும் பயன்படுத்தப்படக்கூடிய விலேகுறைந்த பூச்சி மருந்து ஆகும்.

திரு. கே. எ. வகாப்: தேவையான பூச்சி மருந்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இப்போது இருக்கும் வறட்சி காரணமாகக்கூட அப்படியிருக்கலாம். தேவையானபொழுது கிடைப்பதில்லே. நான் இதைப்பற்றி முன்னுலேயே சொல்லியிருக் கிறேன். நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னுர்கள். அங்கே அதிகாரிகளேக் கேட்டால் அரசாங்கம் அவ்வளவுதான் இண்டென்ட் போட்டு அனுப்புகிருர்கள் என்று சொல்கிருர்கள். பாரசைட் அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: நான் முன்னமேயே சொன்னேன். தேவையான மருந்துகள் அல்லாதவற்றை கட்டாயப் படுத்தி விவசாயிகளுக்குத் தருவதாகத் தெரிந்தால் நடவடிக்கை எடுக்கலாம். தேவையற்ற மருந்துகளே அவர்கள் கொடுக்கவேண்டிய அவசியமில்லே.

Cultivation of grapes

* 211 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the total acreage under grape cultivation in the State;

(b) areas where they are grown in large numbers;

(c) the details of aid given to ryots cultivating grapes; and

(d) the varieties of grapes grown in the State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

* 131–132-ம் பக்கங்களில் இணேப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.